516.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 28 | பிங்கள ஞூ கார்த்திகை இதழ் 1 வ [16—11—77 | இதழ் 11

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தரும் நற்றமிழும்

திரு. சு. இராமலிங்கம் அவர்கள்
(கணித ஜோதிடர்) ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி புதுப்பட்டி Po

2;ந் திருமுறை பண்: நாட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும்வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய் நின்றார்
சேருஞ் சந்தனம் அகிலொடு வந்திழி செழும்புனற் கோட்டாறு
வாருந்தண்புனல் சூழ்சிரபுரந் தொழும் அடியவர் வருந்தாரே.

திருச்சிற்றம்பலம்

எல்லாம் வல்ல அம்பலவாணருடைய அருட்பெருக் கினாலே சிரபுரத்துத் திருப்பாட்டிலே ஐந்தாவது திருப் பாடலை அனுபவிப்போம். உலகமானது எட்டுப் பொருள். களுக்குள் அடங்கியிருக்கிறது. 1. நிலம் 2. நீர் 3. நெருப்பு 4. காற்று 5. வெளி. 6. சூரியன் 7. சந்திரன் 8. உயிர்கள். இந்த எட்டுப் பொருள்கள் தான் உலகமாகஇருக்கிறது. எட்டாவதாக சிற்றறிவுடை யதாக அறிவித்தால் அறியுந் தன்மையுடையதாக உள்ள உயிர்களாகிய நமக்காகவே மற்ற ஏழு பொருள்களையும் சிவபெருமான் படைத்துள்ளார். இந்த ஏழு பொருள் களும் இல்லையானால் நாம் வாழ முடியாது. நாம் வாழ்வ தற்காக நிலமுதலாகிய பொருள்களைப் படைத்து அப் பொருள்களுக்குள் சிவபெருமான் கலந்து நின்று இயக்கிக் கொண்டிருக்கிறார். மாணிக்கவாசக சுவாமிகள் திருவண் டப் பகுதியில் மிகச் சிறப்பாக விளக்கியருள்கிறார்.

நாடொறும்

அருக்கனிற் சோதியமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்

வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப் பலகோடியெனைப் பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்.

என்னுந் திருப்பாடலால் இனிது விளங்கும். இங்கே சொன்ன எட்டுப் பொருள்களையும் எந்த மனிதனும் படைக்கவில்லை. சிவபெருமான் கருணையினுல் படைத்து நமக்கு உதவியுள்ளார். இக்கருணையை மறப்பது மிகப் பெரும் பாவமாகும்.

சிவபெருமான் உலகமாகியும் உலகத்திற்கு காரண மாகியும் உலகத்திற்குள்ளேயும் உலகத்திற்கு அப்பாற் பட்டும் விளங்குபவர். உலகத்திற்கு விசுவரூபன், விசுவ காரணன், விசுவாந்தர்யாமி விசுவாதிகன் என்று நூல்கள் கூறுகின்றன.

அப்பாற்பட்டு விளங்குகிற சிவபெருமான் நிலமா கவும், நீராகவும், நெருப்பாகவும், வாயுவாகவும், ஆகாச மாகவும், சூரியனுகவும், சந்திரனுகவும் உயிருக்கு உயிரா கவும் நின்று அருள் புரிகிருர். இவைகளை அட்டமூர்த்த மென்று நூல்கள் கூறுகிறது. இவ்வுண்மைகளை அறிந் தவன் பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரி பூரணப் பொருள் சிவபெருமான் ஒருவனே என்று உணரு வான். அப்பர் சுவாமிகள் பாடுகிருர்.

இருநிலனுய்த் தீயாகி நீருமாகி
இயமானனு யெறியுங் காற்றுமாகி

அருநிலைய திங்களாய் ஞாயிருகி
ஆகாசமாயட்ட மூர்த்தியாகி
பெருநலமும் குற்றமும் பெண்ணுமாணும்
பிறவுநவும் தம்முருவுந்தாமேயாகி
நெருநலையா யின்ருகி நாளையாகி
நிமிர் புன்சடையடி கணின்றவாறே.

என்பதனுல் விளக்கியருள்கிருர், பாரொடு விண்ணுய்ப் பரந்து நின்று நம்மைச் சீரோடு வாழ அருள் புரிகிருர், சூரியனில் ஒளியாக இருந்து உதவுகிருர். அதுபோல எல்லாப் பொருள்களிலும் அவ்வப் பொருள்களின் தன்மை யாக இருந்து உதவுகிருர். இதனுல் சிவபெருமான் உலக மாய் நின்றருளுகிருர் என்பதை உணர வேண்டும். வேள்வியியற்றும் இயல்புடையது உயிராகலின் வேள்வி யில் தலைவனுமாய் நின்ருர் என்ருர். இதுவரை கண்டது சிவபெருமான். பஞ்ச பூதங்களாகவும் இரு சுடராகவும் உயிராகவும் இருக்கிருர் என்பதை திருஞான சம்பந்த சுவாமிகள்

பாரும்நீரொடு பல்கதிர் (இரவியும்) பனிமதி ஆகாசம்
ஒரும்வாயுவும் ஒண்கனல்

வேள்வியில் தலைவனுமாய் நின்ருர் என்றருளிச் செய் துள்ளார்.

சந்தனமரம் அகில் மரங்களை சேர்த்து வந்து பொருந் துகின்ற செழுமையான புனல்களையுடைய ஆறுகள் சேரு கின்ற குளிர்ச்சியான காவிரி நதியினுல் சூழப் பெற்ற சிர புரத்தை தொழுகின்ற அடியார்கள் வருத்தம் அடையமாட் டார்கள் என்பதாம்.

தொழுகின்ற அடியவர்கள் வருந்தமாட்டார்கள் என்பது மிக முக்கியமானது. அடியவர்களுக்கு இலக்கணம் சிவபெருமானை மூன்றிடங்களிலும் விதிப்படி தொழுதலேயாம் இக்கருத்தை அப்பர் சுவாமிகள்,

"கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர்
தூவிநின்று பைவாய்ப் பாம்பரையார்த்த பரமனை
கைகாள் கூப்பித் தொழீர்"

என்பதனால் விளக்குகிறார். சிவபெருமானுடைய திருவடியில் விதிப்படி மலரிட்டு கைகூப்பித் தொழுதல் வேண்டும். தாயுமான சுவாமிகள்

"அங்கைகொடு மலர்தூவி அங்கமது
புளகிப்ப அன்பினாலுருகி விழிநீர்
ஆறுகவாராத முத்தியின தாவேச
ஆசைக் கடலுள் மூழ்கிச்
சங்கர சுயம்புவேசம்புவே எனவுமொழி
தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறியில்லாத் துன்மார்க்க
னேனையும் தண்ணருள் கொடுத்தாள்வையோ"

என்றருளிச் செய்கிறார். சன்மார்க்க நெறியென்பது மலர் தூவித் தொழுதலாம், அல்லாத நெறிகள் யாவும் சன்மார்க்க நெறியென்று கூறுதல் கூடாது. உலகிலே பலபேர் மலரிட்டுத் தொழுதல் என்னஎன்பதும் எங்கே தொழுதல் வேண்டும், எப்படித் தொழுதல் வேண்டும். எந்த முறையில் தொழுதல் வேண்டும் என்பது, அணுவளவுந் தெரியாமல் இருந்து கொண்டு நான் சன்மார்க்கன் எங்கள் சங்கம் சன்மார்க்க சங்கம் என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் ஞானசம்பந்தர் முதல் தாயுமானர் வரையுள்ள ஆன்றோர்கள் வாக்குகளின்படி அது சன்மார்க்கம் ஆகாது

தாயுமான சுவாமிகள் சைவப் பெருமைகளைக் கூறி தக்க நெறியிந் நெறியேதான் சன்மார்க்கம் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். தம்முடைய மனஞ் சென்றவாறு பத்தி செய்து கொண்டு அவற்றை சன்மார்க்கம் என்று கூறுவது மிகவும் தவறாகும். திருமுறைகளிலும் மற்றெல்லா ஞான நூல்களிலும் இறைவனை மலரிட்டுத் தொழுதல் வேண்டும் என்று மிகவும் அழுத்தமாகக் கூறுகின்றன. வேறு பொருள்களையிட்டுத் தொழ வேண்டும் என்று எங்குங் கூறவில்லை.

"பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்— சம்பந்தர்
பூக்கள் கொண்டரன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மை கறைமிடற்றண்ணலே"

— திருநாவுக்கரசர்

"சுரும்பார் விண்டமலர் அவை தூவி — சுந்தரர்

"முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சி
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே"

— மாணிக்கவாசகர்

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்செயா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்ருரே" — திருமூலர்

"மந்தளவயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ்மலர் கொடு பணிவேனே" — அருணகிரிநாதர்

அங்கைகொடு மலர்தூவி —தாயுமானுர்
மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர்கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி
— சிவஞான சித்தியார்

இப்படியாக பல நூல்களிலும் மலர் கொண்டு பூசிக்க வேண்டும் என்று சிறப்பாக கூறியிருக்க சிவபெருமானின் வேருகாத சிவசத்தியாகிய அம்பாளுக்கு குங்குமத்தினுல் அருச்சனை செய்கிருர்கள். இது மிகவும் தவருனதாகும். மணமும் தேனும் பொருந்திய புது மலர்களால் அருச்சனை செய்தால்தான் வழிபாடு எனப் பெயர் பெறும் அர்ச்சனையாகும். இறைவனுடைய திருவடியில் அர்ச்சிப்பதற்காக மணமும் தேனும் பொருந்திய மலர்களை இறைவன் படைத்திருக்க மஞ்சளால் ஆகிய பொடியை அர்ச்சிக்கலாமா. புஷ்பத்தால் அம்பாளுக்கு அருச்சனை கூடாது என்ருல் புஷ்ப மாலையுஞ் சாத்துதல் கூடாது. குங்குமத்தினுலேயே மாலை சாத்த வேண்டும். அப்படிச் சாத்தினுல் அருச்சனையும் குங்குமத்தினுல் செய்யலாம். புஷ்பத்திலே உள்ள மணம், தேன் இவ்விரண்டும் நாம் இறைவனுடைய திரு

வடியில் மணம் என்னும் அன்பைச் செலுத்தினுல் இறை வன் தேன் என்னும் (கருணை) அருளைச் சுரப்பான் என்னும் குறிப்புடையதாகும் குங்குமத்திலே எந்த வாசனையும் தேனுங் கிடையாது. இன்னொரு குறிப்பும் கண்டு கொள்ளத் தக்கது. என்னெனில் இனம் இனத் தோடு சேரும் என்பது பழமொழி. அதற்கிணங்க இறை வனுடைய திருவடியை மலர்ப்பாதம் என்று எல்லா நூல்களும் கூறுகின்றது. மாணிக்க வாசக சுவாமிகள் மிக அழகாகக் கூறுகிருர், மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்துள்ளுருக என்கிருர், ஆகையால் மலராகிய திரு வடியிலே மலரைச் சேர்ப்பதுதான் முறை. மலரிலே குங் குமத்தைச் சேர்ப்பது முறையல்ல. அம்பாளுக்கு மல ரினுல் அருச்சிக்க வேண்டும். விபூதியே பிரசாதமாகத் தர வேண்டும். இவ்விரிவுரையை வாசிக்கும் அன்பர்கள் நல்ல மலர்களால் இறைவனை அர்ச்சிக்கச் செய்து அருள் பெற முயல்வார்களாக. குருக்கள்மாரிடத்தும் ஆபீச ரிடத்தும் கூறி அம்பாளுக்கு மலர் வில்வம் முதலயவை களால் அருச்சிக்கச் சொல்வார்களாக. அருச்சித்துப் பார்த்தால் ஆனந்த மிகுதியுண்டாகும். இந்தச் சிவ புண்ணியத்தை செய்ய அன்பர்கள் ஈடுபடுவார்களாக நான்கு வேதங்களும் வேதாரண்ணியத்திலே பலகாலம் மல ரினுல் வழிபாடு செய்ததாம். ஒருநாள் கூட குங்குமத் தினுல் அர்ச்சனை செய்யவில்லையாம். எல்லா நூல்களுக் கும் மூல நூல் வேதம், ஆகமம் இரண்டுமாம். அப்படி எல்லாவற்றிற்கும் முதலாயிருக்கிற முதல்வன் அருளிய முதல் நூலாகிய வேதமே மலரினுல் அருச்சித்தது என்னில்

நாம் நம்மிஷ்டப்படி குங்குமத்தினால் அருச்சனை செய்ய லாமா. திருஞான சம்பந்தர் பாடுகிறார் கேளுங்கள்.

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய் யாமறைக் காடா

என்று அருளிச் செய்கிறார். ஆகவே எல்லாக் கோயில் களிலும் மலரினால் அருச்சித்து தொழுது இறைவனுடைய அருளைப் பெற முயற்சி செய்யுங்கள். அப்படித் தொழு கின்ற அடியவர்கள் வருந்த மாட்டார்கள் என்பது திரு ஞான சம்பந்த சுவாமிகள் திருவாக்கு. சிரபுரந் தொழும் அடியவர் வருந்தாரே.

தொடரும்

32. கடத்திற் குறத்தி பிரான்.

திருமதி ஆர். பார்வதி அவர்கள்.
தமிழாசிரியை
நாமக்கல்

கடம் குறிஞ்சி நிலம். குமரக்கடவுள் குறிஞ்சி நிலக் கடவுள். உலகில் உயர்ந்தவருக்கு உயர்ந்த இடம் தருவது வழக்கம். முருக வேளே முழு முதற் கடவுள் ஆதலால் அவரை மலையில் வைத்து நம் பழம் தமிழர்கள் வணங்குவார்கள், ஏனைய கடவுளர்க்கு இடம் கீழும் எந்தை கந்த வேளுக்கு இடம் மலையின் மேலும் என்று வைத்த பண்டையோர் அறிவின் திறம் நினைந்து நினைந்து நெஞ்சம் மகிழத் தக்கதாம்.

1. சேயோன் மேயமைவரை உலகும்''

தொல்காப்பியம்

2. குருந்தைக், குறிஞ்சிக் கிழவனென்று ஓதும் குவலயமே''

அலங்காரம்

இவற்றை யெல்லாம் நுணுகி ஆராய்ந்தவரும் என் கண்ணும் கருத்தும் நுழையாத நூலில்லை'' என்று கூறும் பெருந் தகவுடையவரும் கலியிலும் முருக வேளைத் தெரிசித்த தவசீலரும் ஆகிய பாம்பன் சுவாமிகள்.

3. எந்தக் கடவுளும் என் கோள் போழ்
கந்தக் கடவுளை மிஞ்சாதே''

என்று கூறியருளிய அமிர்த வாக்கையும் உய்த்து உணர வேண்டும்.

திருப்புகழில் பெண்களைப் பற்றிச் சொல்கின்ற பாடல்கள் மிகுதியாக இருப்பதைப் பார்த்து அவர் தம் வாழ் நாளில் காமத்தினாலே அலைப்புண்டு அதனால் தொழு நோய் பெற்று வாடினார் என்று சிலர் சொல்வர். ஆனால் அருணகிரி நாதப் பெருமான் சொன்ன அத்தனை துன்பங் களையும் ஒருவர் அனுபவிக்க வேண்டுமென்றால் அது ஓர் ஆயுளில் நிகழ இயலாது பல நூறு பிறவிகள் எடுத்தால் தான் அத்தனை குற்றங்களையும் செய்ய இயலும், அவ் வளவு துன்ப அநுபவங்களையும் பெற முடியும் அருணகிரி நாதப் பெருமான் உலகில் வாழ்கின்ற மக்கள் செய்கின்ற குற்றங்கள் அத்தனையும் படுகின்ற துன்பங்கள் அத்தனை யும் தம்முடையசொந்த வாழ்வில் நிகழ்ந்ததைப் போல எண்ணி இறைவனிடம் இறங்குகின்ற பெரும்கருணையாளர்

அப்படியானால் எத்தனையோ குற்றங்களை மக்கள் செய்கின்றார்களே, அவை எல்லாவற்றையும் குறிப்பிடா மல் பெண்களைப் பற்றி மட்டும் மிகுதியாகக் கூறியிருப் பானேன் என்ற வினா எழலாம், அதனாலே தான் அவர் நமக்காகவே பாடினார் என்று கொள்ளலாம், எப்படி?

ஒரு மருத்துவர் எந்த நோய்க்காரர் தம்மிடம் வந் தாலும் நன்றாக சோதனை செய்து தனித்தனியாக மருந்து எழுதிக் கொடுப்பது வழக்கம். கம்பவுண்டர் சீட்டைப் பார்த்து மருந்து கலக்கிக் கொடுப்பார். ஒரு சமயம் ஊரில் திடீரென்று காலரா கண்டது. ஊர் முழுவதும் பரவி

விட்டது, அவர் விட்டிற்கு வருகின்ற நோயாளிகள் யாரைப் பார்த்தாலும் காலரா என்று சொல்லி கொண்டு வந்தார்கள். டாக்டர் என்ன செய்வார் ஒவ்வொரு வருக்கும் தனித்தனி மருந்தா எழுதிக் கொடுப்பார் ஒரு பெரிய பாத்திரம் நிறைய காலரா மருந்தைக் கலந்து வைத்து வருகின்ற நோயாளிகளுக்கு அதை எடுத்து எடுத்துக் கொடுக்கச் செய்தார்.

அவ்வாறே எந்தக் காலத்திலும் பெரும் பாலனவர் களுக்கு மிகுதியாக வருகின்ற வியாதியாக காம நோய் இருப்பதால் மருத்துவராகிய அருணகிரிப் பெருமான் அந்த நோய்க்கான மருந்தை மிகப் பெரிய அளவில் கலந்து வைத்திருக்கிருர்.

காமம் என்பதற்கு ஆசை என்று பொருள், இது மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை ஆகிய மூன்றுக்கும் பொது வானது என்ருலும் வாழ்க்கையில் மிகப் பெரிய ஆசையாகப் பெண்ணுசை இருப்பதால் அதற்கே காமம் என்ற பெயர் வழக்கில் வந்து விட்டது, அந்த ஆசைதான் மனிதர்களுக்கு உண்டாகிற பெரிய நோய், பெரிய பெரிய யுத்தங்களுக்கு மூல காரணம் காமம். இராம இராவண யுத்தத்திற்கும் அடி அதுதான். இராமன் அயோத்தியில் இருந்து இலங்கைக்குச் சென்று சண்டை போட்டான், காரணம் பெண்ணுன சீதை மேல் இராவணனுக்கு ஏற்பட்ட அரக்கக் காதல், அதற்கு மூல வித்து சூர்ப்பநகை, இராமனிடத்து அவளுக்கு உண்டான இராட்சதக் காமம், அந்த விதையைத் தூவியது. ஆகவே ஆண்களுக்கும் தீய நிலையிலே காமம் வரும் பெண்

களுக்கும் தீய நிலையிலே காமம் எழும். இராம இராவணப் பெரும் போருக்கு மூல விதையே காமம், அகலிகைக்கு மிகப் பெரிய துன்பம் வந்ததற்குக் காரணம் இந்திரனது காமம், இப்படியாகக் காமத்தால் உண்டான இன்னல்கள் மிகப் பல. ஆகவே மருத்துவராகிய அருணகிரி நாதர் அதற்கான மருந்தை அண்டா அண்டாவாகக் கலந்து வைத்திருக்கிறார். மற்ற நோய்களுக்கும் மருந்து அவரது பாடல்களில் உள்ளன, ஆயினும் காமத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல்களே திருப்புகழில் மிகுதியாக வருகின்றன.

நல்ல கட்டிளங் காளையாக இருக்கும் போது ஊரைச் சுற்றித் திமிர் பிடித்து அலைந்த எத்தனையோ பேர் வயது ஆக ஆக அடங்கி ஒடுங்கி நல்லவர்களாக உட்கார்ந்து விடுகிறார்கள். தசைக் கொழுப்பு இருக்கும் வரை மனிதனுக்குத் தெளிவு உண்டாவதில்லை, தசைக் கொழுப்பின் கிளர்ச்சியே காமம் என்பது. அதையும் மீறி ஒருவன் தர்மம் செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும். அதைத்தான் இந்தப் பாட்டில் சொல்லி வருகிறார் அருணகிரியார்.

" கடத்தில் குறத்தி பிரான் அரு
ளால் கலங் காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந்
தேன் சித்ர மாதர் அல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்த செவ்
வாயில் பணையில் உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெங்
காம சமுத்திரமே"

சமுத்திரம் கரை இல்லாதது " இந்த வெங்காம சமுத்திரத்திற்கும் கரை இல்லை. ஐந்து திருமணம் பண்ணிக் கொண்டவன் ஆரும் திருமணமும் பண்ணிக் கொள்வதைக் காண்கிறோம். தசரதமன்னர். அறுபதினு யிரம் மனைவியை மணந்துக் கொண்டவர். திரௌபதிக்கு ஐந்து கணவர், அதற்கு மேலும் கர்ணனிடத்தில் அவளுக்கு ஆசை இருந்தது, இது காமத்தின் இயற்கை, விசுவாமித்திரர் போன்ற பெரிய முனிவர்களும் காமத் தினுல் அல்லல் பட்டார்கள்.

தோற்றத்தைக் கண்டு, தோலைக் கண்டு, மூக்கு விழியைக் கண்டு ஏமாந்து போகின்றவனுக்குக் காமம் பரவுவதற்குக் காரணம் அந்தத் தோற்றமே, அதனுல் காமமென்னும் கடல் மங்கையரின் உறுப்புகளிலே பரவிக் கிடக்கிறது என்கிருர் அருணகிரியார்,

காமத்தில் நல்லதாகிய ஒன்றும் தீய தாகிய ஒன்றும் இருக்கின்றன. அன்புடைய காமம் காதல், அது நல்ல காமம், தீயதோ வெங்காமம், கொடுமையான காமம் அதனுல் அதை வெங்காம சமுத்திரம் என்கிருர். புறக் கண்களால் வெறும் உடல் அழகால் மாத்திரம் பார்ப்ப தால் எழுகின்ற காமம் வெங்காமம், குண நலன்களைப் பார்க்கும் பார்வை வெங்காமத்திற்கு இல்லை.

சீதையை இராமனும் பார்த்தான் அவளும் அவனைப் பார்த்தாள். இருவரும் கண்களாகிய வாசல் வழியே நுழைந்து ஒருவர் உள்ளத்தை ஒருவர் தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

' பருகிய நோக்குஎனும் பாசத் தால்பிணித்து
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்''

மன்மதன் உலகிற்கே அழகு மன்னன், அவனும் சீதையைப் பார்த்தான். அவள் அங்கங்களின் அழகைப் பார்த்தான். சீதையை அப்படியே சித்திரமாக எழுத வேண்டும் என்று எண்ணினான். அமுதம் கலந்த வண்ணத்தைக் குழைத்து வைத்துக் கொண்டு தூறிகை யை எடுத்துச் சித்திரம் தீட்டப் போனான், சீதையின் உயி ரோவியத்தைத் தீட்ட வேண்டும், அவள் குணங்களைக் கண்டு எழுதத் துனிந்தானு? சீதையை மற்ற பெண்களைப் போலவே எண்ணி அங்க நலன்களைப் பார்த்து தீட்டப் போனான் அவனால் சீதையை எழுத முடியுமா?,

"ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து
அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும் அல்லால்
மதனற்கும் எழுத வொண்ணாச் சீதை,;

மன்மதனாக இருந்தால் என்ன? அவனாலும் எழுதுவ தற்கு முடியாத கற்புடைய மங்கை சீதை,

சித்ர மாதர் என்கிறார் அருணகிரியார். அலங்காரமான பெண்கள் என்பது பொருள், தன் நாயகனுக்கு மாத்திரம் இன்பம் அளிக்க வேண்டும் என்று எண்ணி அலங்காரம் பண்ணிக் கொள்ளும் பெண்ணின் அழகு பிறர் கண்களில் படாது. பிறர் கண்களில் பட வேண்டும் என்றே தம்மை அலங்காரம் பண்ணிக் கொண்டு ஆடவர் உள்ளங்களை மயக்கிக் கவர்ந்து வந்த சித்திர மாதர்கள் உலக முழுவதும் இருந்தார்கள்.

வெங்காம சமுத்திரம் அத்தகைய சித்ரமாதர் மேனி முழுவதும் படர்ந்திருக்கின்றது என்கிறார் அருணகிரியார். அவர் கற்புடைய பெண்களைக் குறிக்கவில்லை. பிறர் கண்ணில் பட்டும் மையல் செய்யாத கற்புடைய மங்கையர்களுடைய அழகு அவர்களுடைய கணவர்களுக்கு மட்டுமே குளிர்ச்சியையும் இன்பத்தையும் அளிக்கும்.

சமுத்திரம் பரவிக் கிடக்கின்றது என்றாலும் அதில் ஒரு துளியாவது மனிதனுடைய தாகத்தை அடக்குமா? கடல் நீரைப் பருகப் பருக தாகந்தான் அதிகமாகும். அதைப் போல வெங்காமத்தை நுகர நுகர மேலும் தாகம் உண்டாகிறது. காமம் மேலும் வளர்கிறது. அந்தக் கடல் புறப் பார்வையில் படும்படியாக சித்ர மாதர்களுடைய உறுப்புக்களில் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. தன் புறக் கண்களால் இந்த அழகைப் பார்த்து மனத்தை இழப்பவன் அக்கடலுள் மூழ்கித் துன்புறுகிறான். வாழ்நாளை வீணாக்கிக் கொண்டு ஆழ்ந்து போகிறான். அந்த சமுத்திரத்தை அருணகிரியார் கடந்தாராம்.

சமுத்திரத்தைக் கடக்க வேண்டுமானால் தெப்பம் வேண்டுமே. உங்களுக்குத் தெப்பம் எது? என்ற வினாவிற்கு மிகவும் வேடிக்கையாக அழகாக முரண்பாடு போலத் தோன்றும்படி விடை சொல்கிறார்.

''கடத்தில் குறத்தி பிரான் அரு
ளால் கலங் காதசித்தத்
திடத்தில் புணையொடுயான் கடந்தேன்''

பசித்தவன் ஒருவனிடத்தில் போய் என் பசியை யார் தீர்ப்பார் என்று கேட்டபோது அவனிடம் போ என ஒரு வனைக் கைகாட்டி விட்டுப் போனுர் அவர். ஆனுல் இவன் அவனிடம் போய்ப் பார்த்தால் அவன் ஒரு மாதம் பட்டினி. அவனிடம் போனுலா பசி தீரும்.

வெங்காம சமுத்திரத்தைக் கடந்தேன் என்கிறீர்களே புணை ஏது? என்று கேட்டால் அருணகிரியார் காட்டில் வாழும் வள்ளியிடம் ஆசை கொண்டானே அவன் தந் தான் என்று சொல்கிருர்.

வள்ளிக் கலியாணம் என்பது காமக் கலியாணம் அன்று. அது ஞானக் கலியாணம். காமம் கடந்த கலி யாணம். ஆகவே வள்ளியை ஆட்கொண்ட எம்பெரு மானின் அருள் கிடைக்குமானுல் வெங்காம சமுத்திரத் தைக் கடக்கலாம்.

மகமாயை களைந்திட வல்ல பிரானுகிய வள்ளி மண வாளன் திருவருளால் அன்றி காம சமுத்திரத்தைக் கடக்க இயலாது. காசிபர், விசுவாமித்திரர் போன்ற முனிவர் களும் அதில் வீழ்ந்து அலமருண்டனர். ஆதலால் நம் அருணையடிகள் காமக் கடலைக் கல்விப் பெருக்காலும், யோக முதிர்ச்சியாலும், அறிவின் மிகுதியாலும் கடப்பது மிகவும் அரிது என்பதையும் காமனை எரித்த கண்ணுதலில் வெளிப்பட்ட கந்த வேளைப் பிரார்த்திப்பது மூலம் கடப்பது எளிது என்பதையும் உலகிற்கு உணர்த்த பல பாடல்களை ஓதியருளினுர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

"மேல் வீழ்ந்து தோயும் தூர்த்தன் மோகாந்தகாரம் தீர்க்க
வேதாந்த தீபம் காட்டி ...... அருள்வாயே"

"இன்பச் சிங்கியில் வீணே விழா ...... தருள்வாயே

"மங்கையர் சுகத்தை வெகு இங்கிதமெ னுற்றமனம்
உன்றனை நினைத்தமைய ...... அருள்வாயே"

"சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்
மங்காம லெனக்கு வரம் தருவாய்"

திருவேல் இறைவன் திருவருளால் உறுதியான உள்ளம் உண்டாகும். கலக்கமில்லாத திட சித்தத்தை தெப்பமாகக் கொண்டு ஒருவரும் கடக்க முடியாத காமக் கடலைக் கடந்தேன் என்று கூறும் வீறுமொழி எத்துணை விழுமியது? எத்துணை கெம்பீரம். என்ன அழகு. அருண கிரியாரது கலங்காத உள்ளத்தின் உயர்வு இமயத்திலும் உயர்ந்ததாகும். அவருடைய உள்ளத்தின் உயர்வு எழுதுகோலுக்கு அடங்காது.

காமம் மிகவும் வெம்மையானது. அது உடம்பையும் உயிரையும் உணர்வையும் சுட வல்லது. தீயினல் வெதும்பியவர்கள் நீரில் மூழ்கி தட்பமுறுவார்கள். காமத் தீயினுல் வெதும்பியவர்கள் நீரினுள் குளிப்பினும் உய்வு பெறுர்.

"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்து முயலாகும் — நீநட்
குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்."

— தாயுமானவர்

தீ தொட்டால் மட்டும் சுடும், காமம் விட்டகன்று விலகினும் சுடவல்லது.

"தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ"

தீ விலகினுல் சுடாது, நெருங்கினுல் சுடும், காமமாகிய தீ நீங்கில் சுடும். நெருங்கினுல் குளிரும். இது ஓர் அற்புதமான நெருப்பு.

"நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டும் பெற்ருளிவள்"

— குறள்

காமம் மிகப் பெரிதானுதால் சமுத்திரம் என்ருர்.

வள்ளி காந்தனைப் பாருங்கள். தொழுங்கள். அவன் அருள் உங்கள் சித்தத்தின் சலனத்தைப் போக்கி உறுதியை உண்டாக்கும் என்று நல்லுபதேசம் செய்கிருர்.

"கடத்திற் குறத்தி பிரானரு ளால்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங் காம சமுத்திரமே"

அருள் மொழி அமுது

36. A. தெய்வ நீதி

(சுந்தரமூர்த்தி நாயனுர் சரித்திரம் – தொடர்ச்சி)

ஸ்ரீ ராமநாமப்பரதேசி
8119. கீழ இரண்டாம் வீதி
புதுக்கோட்டை-1.

திருச்சிற்றம்பலம்.

கைலையில் இறைவனுல் ஏவப்பட்ட அநிந்திதையார் ஞாயிறு என்னும் திருப்பதியிலே கிழன் என்பவரின் மகளாக அவதரித்து, முன் நல் வினைப்பயன் காரணமாக, கைலையில் அம்மையாருக்குப் பணி செய்த நினைவு மாருமல் நன்குவளர்ந்தார். நம் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் எப்படிக் கிடைக்குமோ எங்கோ வெனத் தாய் தந்தையர் கவலைப்பட்டுப் பேசியதைக் கேட்ட சங்கிலி நாச்சியார் "எம்பெருமான் திருவருள் பெற்ற ஒருவருக்குத் தானே நான் உரியவளாக முடியும். இவர்கள் என்னென்னவோ பேசுகிருர்களே" என எண்ணி மூர்ச்சித்து விழுந்தார் தாய் தந்தையர் திடுக்கிட்டு, பரிந்தெடுத்து, "என்ன?" எனவினவுதலும், " நான் ஒரு சிவனடியாருக்கு உரியவள். திருவொற்றியூர்ந்து சிவபெருமானது திரு வழியிலே செல்லுவேன் " என்றனள். இது கேட்டு அதிசயத்த தாய் தந்தையர் நடந்த செய்தியை வெளியில் சொல்லாதிருந்தனர். பெண் கேட்க வந்த சிலர், எந்த மணமகனுக்காகப் பெண் கேட்க வந்தாரோ அவனும், ஏதோ பாபம் செய்தவர்

தண்டிக்கப்பட்ட மாதிரி இறந்தனர். செய்தி வெளியில் பரவியதும் பெண் கேட்க எல்லோரும் பயந்தனர், தாய் தந்தையர் பெண்ணை அழைத்துச் சென்று தக்க வசதி களுடன் திருவொற்றியூரில் வைத்தனர். தன் மகள் என் பதை மறந்து, அவள் தெய்வீகமான சிவனடியாள் என்ற முறையில் அவளை வணங்கிய தந்தையார் "தாய் தந்தை யர் என்ற பந்தம் நீங்கிவிட்டது. நாங்கள் உங்களுக்குச் சேவை செய்ய நீங்கள் இறைவனுக்குச் செய்யும் நிலை யடைந்து விட்டீர்கள்" எனக் கூறி கன்னிமாடத்தில் விட்டு அகன்றனர். முன்பிறவியின் துடர்ச்சியாக இறை வனுக்கு மாலை கட்டிக் கொடுப்பதையே சங்கிலியார் கைக் கொண்டார். அன்பு மாறாது ஐந்தெழுத்தை மனத்தால் எண்ணிக் கொண்டு, வாய் பேசாமல், பூமாலைத் தொடுக் கும் அடியார்களை வணங்கிக் கொண்டு வந்து சுந்தரர், வேறொரு புறத்தில், திரையை நீக்கிக் கொண்டு இறை வனுக்கு மாலையைக் கொடுத்து மின்னல் போல் மறைந்த சங்கிலிநாச்சியாரை கண்டனர்.

அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்தே
என்புள்ளுருகு மடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போல திரை நீக்கி முதல்வர் சாத்தும் பணி கொடுத்து
மின் போன் மறையும் சங்கிலியார் தம்மை விதியார் கண்ணுற்றார்

மின்னல் போன்று தோன்றி மறைந்த அப்பெண்ணை யாரென்று கேட்க சங்கிலி நாச்சியார் என்னும் பெண்மணி இவர் நிரம்பத்தவஞ் செய்து ஈசனுக்கே அடிமை செய்து கொண்டுள்ள கன்னிப் பெண் எனக் கூறினர் அயலுள்ள வர்.

சங்கிலி நாச்சியாரை அறிமுகப்படுத்தும் போது "அம்மையப்பரின் பாதம் மறவாத அன்புணர்வு தானு கவே வந்தணைந்தது".

"மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால் வந்த நெறி
தலையாம் உணர்வு வந்தணைய தாமே அறிந்த சங்கிலியார்"

என்ற சங்கிலிநாச்சியாருக்குத் தனது முன் நினைவு வந்தது என்பதைப் போல் சுந்தரருக்கும் "இரண்டு பேருக்காக இப்பிறவியை எடுக்கச் செய்தார் இறைவன் ஒருத்தி பரவை மற்றொருத்தி இவள் போலும்"

"இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்து வித்தார்,
மருவும் பரவை யொருத்தி: யிவள் மற்றையவளாம்" எனமருண்டார்

திருமணங்கள் தேவலோகத்தில் நிச்சயிக்கப்படுகின்றன (Marriages are made in Heaven) என்ற பழமொழி இம்

மாதிரி சம்பவம் காரணம் போலும் இருவரும் ஒருவரை யொருவர் முன் வினை காரணமாக விரும்பினர் என்பது குறிப்பு.

ஒற்றியூர் இறைவனிடமே கூறி இவளை அடைவேன் என எண்ணிய சுந்தரர் திருக்கோயிலிற் சென்று சங்கிலியாரைத் தமக்குத் தரவேணும் என வேண்டினர். இறைவன் சுந்தரரிடம் "சங்கிலியான கொம்பை உனக்குத் தருகிறோம்" என்றனர், கொடி மரத்தைச் சுற்றிக் கொள்ளும். அது போல பரவையார் சுந்தரரை அணைந்து கொண்டு அடிக்கடி செல்வத்தை எதிர் பார்த்தாள் கொம்பாகிய சங்கிலி உன்னை எதிர்பார்க்கமாட்டாள் என இறைவர் சூசனையாகக் கூறினர். சுந்தரர் மகிழ்ந்தார்:

அன்று இரவில் சங்கிலியார் கனவில் இறைவர் தோன்றி சுந்தரரின் பெருமையை

சாருந்தவத்துச் சங்கிலிகேள்! சால என்பால் அன்புடையான்
மேருவரையின் மேம்பட்ட தவத்தான்: வெண்ணை நல்லூரில்
யாரும் அறியயான் ஆள உரியான்: உன்னை எனை இரந்தான்
வார் கொள்முலையாய்! நீ அவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்தென்று',

என்று கூறி அவரைத் திருமணம் செய்து கொள் எனக் கூறினர் சுந்தரருக்கு நேரில் காட்சி கொடுத்த இறைவன், சங்கிலிக்குக் கனவில் காட்சி கொடுத்தது சுந்தரரின் மிகு தியானதவத்தையும் பக்தியையும் காட்டுகிறது. சுந்தரனைத் திருமணம் செய்து கொள்ளப் புண்ணியம் செய்த சங்கிலியே! என இறைவன் சாரும் தவத்துச் சங்கிலிகேள்! என விளித்ததிலிருந்து சுந்தரரின் பெருமை விளங்கும்.

சங்கிலிநாச்சியார் அதற்கு இசைந்ததுடன், "அம்மையின்பாகம் பிரியாதவரே (கொம்பின் ஆகம் கொண்பீர்)" என விளித்து, "தாங்கள் எப்படி அம்மையை ஒருபாகத்தில் வைத்துக் கொண்டு பிரியாதவர்களாயிருக்கிறீர்களோ அது மாதிரி நானும் என் நாயகரைப் பிரியாதிருக்க விரும்புகிறேன். அவரோ திருவாரூர் இறைவனைப் பிரியாதிருக்க மாட்டார் என்கின்றனர். அதற்குத்தக்கவாறு ஏற்பாடு செய்தால் நலம்" என்ருர். இறைவன் மனத்தினுள் சிரித்துக் கொண்டார். "உன்னைப் பிரிந்து போகா வண்ணம் இருப்பேன் எனச் சுந்தரர் உன்னிடம் தக்கவாறு சபதம் செய்வார்" என்று கூறி, சுந்தரமூர்த்தியாரிடம் வந்து " அவளை மணம் புரிந்து கொள்ள வேணுமென்ருல் இன்று இரவே சங்கிலியாரிடம் அவளைப் பிரிவதில்லை திருவொற்றியூரின் எல்லை தாண்டுவதில்லை எனச் சபதம் செய்ய வேணும் என்றனர். பலதலங்களுக்குச் சென்று கும்பிடும் பக்தர், திருவொற்றியூரிலேயே இருக்க முடியாதே எனக் கவன்ருர், எனினும் சங்கிலியின் மீதுள்ள ஆசையையும் விடமுடியவில்லை. என்னதான் தனக்கு இறைவர் தோழன் என்ருலும் அவர் எதிரிலேயே அவ்வாறு சபதம் எடுத்துக் கொள்ளத் தயங்கினர். ஆதலால் நான் சபதம் செய்து கொள்ளும் போது" கோயிலை விட்டு வந்துத் தாங்கள் திருக்கோயிலுக்கு வெளியிலுள்ள மகிழ மரத்தடியிலிருக்க வேணும் எனவேண்டினர்.

சங்கரர் தான் பணிந்திருந்து தமிழ்வேந்தர் மொழிகின்றார்
மங்கை அவள் தனைப்பிரியாவகை சபதம் செய்தவனுக்கு
அங்கவளோடு யான் வந்தால் அப்பொழுது கோயில் விடத்
தங்குமிடம் திருமகிழ்க்கீழ்க் கொள வேண்டும் எனத்தாழ்ந்தார்

இறைவன் தன்னைத் தோழமையாகத் தந்த போதிலும், சுந்தரர் அவரது தெய்வத்தன்மையை மறவாது. அவரது எதிரிலே சபதம் எடுத்துக் கொண்டால் மீறக் கூடாது என எண்ணி மகிழமரத்தின் கீழ் அமருமாறு வேண்டினார். தான் தெய்வமாயிருந்த போதும், சுந்தரர் திருமணம் நிச்சயம் செய்து கொள்ளுவதைத் தனது கண்களால் காணத் தோழர் என்ற முறையில் இறைவன் விரும்பினார். மேலும் எப்படிச் சப்தம் செய்தாலும் மீறினால் தண்டனையுண்டு என்றதெய்வநீதி மாறாது என்பதை உலகிற்கும் சுந்தரருக்கும் காட்ட அருளிய இறைவர் ஒரு சிறு விளையாட்டைச் செய்தார். சங்கிலியாரிடம் வந்து "நங்கை" ஆரூரர் உன்னைப் பிரியேன் என என் எதிரில் சபதமேற்க வருவார். இறைவர் திருமுன்னர் எதற்குச் சபதம் செய்ய வேணும்? கோயிலிற்கு வெளியிலுள்ள மகிழமரத்தடியில் செய்தாற் போதும் எனக்கூறு' என, சங்கிலியாரும் உடன்பட்டார்.

மாணிக்கவாசகர் பாண்டியன்க் குதிரை வாங்குதற்காகக் கொடுத்த பொருளைத் திருப் பெருந்துறைக் கோயிலைப் புதுப்பிக்க உபயோகித்தார். இறைவன் அவரைத் தக்க முறையில் காத்த போதிலும், பிறர் பொருளை எடுப்பது, தெய்வ காரியத்திற்கான போதிலும் குற்றமே என உலகம் உணர்வதற்காக, மணிவாசகரை அரசனது வேலையாட்கள் தண்டிக்கும்படி செய்தே,

பின்னரே சாத்தார் என்பது கண்கூடு. தெய்வ நீதி, என்பது யாவருக்கும் ஒரே மாதிரி என்பதை அறிய வேணும்.

மறுநாட் காலையில் சங்கிலியாரைப் பிரிவதில்லை யெனச் சபதம் ஏற்கச் சுந்தரர் வந்த போது "இந்தச்சிறு காரியத்திற்கு இறைவன் திரு முன்னிலையில் சபதம் செய்ய வேண்டா. கோயிலுக்கு வெளியிலுள்ள மகிழ மரத்தடியில் சபதம் செய்தால் போதும்." எனக் கூறினர் சங்கிலியார். எதிர்பாராத இவ்வுரை கேட்ட சுந்தரர் மறுத்தால் ஏதாவது பழிச் சொல்லுக்கு இடமாகும் என எண்ணி, சம்மதித்தார். மகிழ மரத்தை முக்காலும் வலம் வந்து "சங்கிலியைப் பிரியேன்" எனச் சபதமேற்ருர். தனது கணவர் தனக்காக இவ்வாறு சபதமேற்றது கண்டு சங்கிலியார் சிறிது கலங்கினர். தெய்வத்தின் எதிரில் சபதம் ஆணையிடுவது என்பது இயல்பிற்கு மாருன வலிந்த செய்கை. எனினும் இறைவனது ஆணையென மனந்தேறிக் கன்னிமாடம் புகுந்திருந்தனர்.

இறைவன், சங்கிலியாரை அவரது உறவினர் தெய்வீகமானவர் என்று எண்ணி வணங்கி, கன்னி மாடத்தில் கைவிட்டுச் சென்றமையால், ஊரிலுள்ள சிவனடியார்களிடம் சங்கிலியாரைச் சுந்தரருக்கு அக்னி சாட்சியாக (உம்பர் வாழ் உலகறிய) அளிக்குமாறு கட்டளையிட்டனர்.

"நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலிதன்னை
இம்பர் ஞாலத்தில் நம் ஏவலினல் மணவினை செய்து
உம்பர் வாழ் உலகறிய அளிப்பீர்"

என உணர்த்த, ஊரவரும் திருமணத்தை முடித்து வைத்தனர். கணவனும் மனைவியும் பிரிந்திருந்தால் ஒரு விஞடி ஒரு யுகமாகத் தெரியும். கூடியிருந்தால் ஒரு யுகம் ஒரு கணமாக ஓடி விடும்.

நாட்கள் பல கழிந்து, வசந்த காலம் வந்தது. சங்கிலியாருடன் இன்ப வாழ்க்கை நடத்திய சுந்தரர் ஒற்றியூர் இறைவனை மறவாது வணங்கி வாழ்ந்தனர். வசந்த காலத்தில் திருவாரூர்ப் பெருமானுக்கு நடக்கும் விழாவில்

"பண்ணரும் மொழிப் பரவையார் பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டு கேட்டாற் போற் கருதிஞர்"

இத்துடன் திருவாரூர் இறைவனைப் பிரிந்திருக்கிறேமே என்ற வேதனையடைந்தார். அன்புடன் என்றும் நினைப்பவரைத் தான் நினைப்பார் இறைவன் என்ற கருத்தை நீங்காத காதலினுல் நினைந்தாரை நினைப்பாரை எனக் குறிப்பிடுகிருர் அருள் மொழியார்.

திருவாரூர் இறைவனைக் காண்பதற்கெனச் சுந்தரர் புறப்பட்டிருந்தால் கூட அவருக்குத் துன்பம் ஏற்பட்டிருக்காது. பரவையின் ஆடல் பாடலைக் காண எண்ணியதால் அவருக்குத் துன்பம் ஏற்பட்டது போலும்!

ஒரு நாள் திருவொற்றியூர் இறைவனைத் தரிசித்துத் திருவாரூர் நோக்கிப் புறப்பட்டார். இவ்விடத்தில் சேக்கிழார் உள்ள இனியார் என இறைவனைக் குறிப்பிடுகிருர். இனித் திருவொற்றியூர் இறைவனை மனத்தால் நினைக்க முடியுமே தவிர, காண முடியாது எனக் குறிப்பு.

திருவொற்றியூர் எல்லை தாண்டியதும் சபதம் மீறியதால் அவரது கண் பார்வையை இழந்து அலறிஞர்.

தனது சபதத்தை மீறியதால் இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்தது என அறிந்தார். மீறிய பழியும் அதனுல் ஏற்பட்ட துன்பத்தையும் எண்ணி வெட்கி திருவொற்றியூர் இறைவனைப் பாடினுர்.

"பொய் முதலானவை நிறைந்த உடலுடன் உன் திருவடியடைந்தேன். அதுவும் இப்பேர்ப்பட்ட துன்பத்தையடைந்து விட்டேனே! ஆட்டுப்பால் கறக்கும் போது புழுக்கை சேர்ந்து விழுந்து விடும்! புழுக்கையைத் தூக்கியெறிந்து பாலை ஏற்பர்! அதுமாதிரி என் பாவங்களை மறந்து ஏற்கக் கூடாதா? எது நேரினும் நின் திருப்பெயரையே கூறுவேன்! வேறென்றும் அறியேன்! என் கண்ணுக்கு ஒரு மருந்து கூற மாட்டாயா" எனத் தேவாரம் பாடினுர்.

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான் படற் பால தொன்ருனல்
பிழுக்கை வாரியும் பால் கொளவர் அடிகேள்
பிழைப்பனுகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என் கணுக்கொரு மருந்துரையாய்
ஒற்றியூர் எனும் ஊருறை ஊகுறைவோனே

திருச்சிற்றம்பலம்

பதிகத்தில் கண்ணொளி கேட்கவில்லை. தண்டனையை ஏற்ருர் குற்றத்தை உணர்ந்தார். மருந்து கேட்டார். பின் ஒளி கேட்டார். திருவாரூர் செல்லும் ஆவலினுல் பிறர் வழிகாட்ட ஆரூர் சென்ருர். திருமுல்லை வாயில் சென்ருர்.

"சங்கிலிக்காக என் கண் கொண்ட பண்ப" "அடியேன் படுதுயர் களையாய்!" என்றெல்லாம் பாடினுர். திருவெண்பாக்கம் என்ற தலம் வந்த காலத்தில் திருக்கோயிலை அடைந்து "கோயிலுள்ளாயோ?" என விளித்த காலத்தில் "உளோம் போகீர்" எனக் கூறி, ஒரு ஊன்று கோலளித்தார்.

திருச்சிற்றம்பலம்

"பிழையுளன பொறுத்திடுவரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென் கண்மறைப்பித்தாய்!
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயோ என்ன
உழையுடையானுள்ளிருந்து உளோம் போகீரென்றுனே"

திருச்சிற்றம்பலம்

கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுக்கும்! என்ற பழமொழி இதனுல்தான் உண்டானது போலும்!

திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி, வெளியில் தங்கி, காஞ்சிபுரம் சேர்ந்தார். இங்கு கண் வேண்டி

"விண்ணுள்வார் அமுதுண்ண மிக்க பெருவிடமுண்ட
கண்ணுளா! கச்சி ஏகம்பனே! கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங் கியான் காண எழிற்பவள
வண்ணா! கண்ணளித்தருள்வாய்! என வீழ்ந்து வணங்கினுர்".

அம்மையின் பிரபாவம் அதிகமான தலமாதலால் இறைவர் அங்கு இடக்கண் தெரிய அருள் புரிந்தார். அடியேன் எம்பெருமானைத் தரிசிக்கக் கண் கிடைத்ததே என மகிழ்ந்து

திருச்சிற்றம்பலம்

"ஆலந்தானுகந்த முதுசெய்தானை: ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை: சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை :
ஏலவார் குழலாளுமை நங்கையென்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே

திருச்சிற்றம்பலம்

எனத் தேவாரம் பாடி மகிழ்ந்து வணங்கினுர்.

திருச்சிற்றம்பலம்

544.

(சிவ சிவ

திருமுறைக் கண்காட்சி

திரு, இராம. கோபாலகிருட்டினன், எம். ஏ. அவர்கள்,
உதவிப் பேராசிரியர், தத்துவத்துறை,
அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி,
பழநி—624602.

எழுதா மறை அளித்த எழுத்தறியும் பெருமான் சிவபெருமானை 'முக்கண்ணன்' என்று மறைகள் கூறு கின்றன. 'கண்காட்டும் நுதலான் என்று சம்பந்தப் பெருமான் குறிப்பிடுவது போன்று நெற்றிக்கண் உடையவர். நயனம் மூன்றுடைய நாயகனின் மூன்று கண்களில் பார்வதிதேவியை இடப்பாகம் கொண்டருளிய போது ஒன்றரைக் கண்ணனுயினர், திருநாவுக்கரசர் தீந் தமிழில்,

"இன்றரைக் கண்ணுடை யாரெங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்து மையாளையும் பாகம் வைத்து
ஒன்றரைக் கண்ணன் கண்டீ ரொற்றி யூருறையுத்தமனே"

என்று சுவைபடப் பாடுகின்றார். பின்னல் வந்த கவிஞர் ஒருவர் கண்ணப்பர் ஒரு கண் பெயர்த்து அப்பிய தால் அந்த ஒன்றரைக் கண்ணிலும் ஒருகண் வேடனுடையது எனவே சிவபெருமான் அரைக்கண்ணன் என்று நயமாக உரைக்கின்றார்.

'காணுதற்கரியார் தம்மை ஆர்வமுன்பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே நேர்பெற நோக்கி நின்ற' கண்ணப்பர் சிவபெருமானின் திருக்கண்ணில் குருதி கண்டபொழுது 'கெட்டேன்' எனப்பதறி 'உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்' என உணர்ந்து ஒரு கண்ணைப் பெயர்த்தெடுத்தப்பினர் மறுகண்ணிலும் ஈசன் குருதி காட்டிய போது 'மருந்து கை கண்டேன்' இன்னும் உண்டொருகண்; அக்கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன்' என்று பெயர்த்தெடுக்க முயன்ற போது எம்பெருமானல்

தடுக்கப்பட்டு 'என் வலத்தில். மாறிலாய்! நிற்க!' என்று அருளப்பெற்றார். இவண், கண்ணப்பர் 'ஒழிப்பேன்' என்று சொன்னது இறைவனது துயரம் என்ற பொருளாக இருப்பினும் பாசப்பிணிப்பை ஒழித்து பிறப்பிறப்பு எனும் பிணியை ஒழிப்பேன் எனக் கூறும் சேக்கிழாரின் திறன் வியக்கத்தக்கது.

ஆண்டவனின் அடியார்கள் அனைவர்க்கும் ஆண்டவனை ஆலயத்திலும் தங்கள் ஆன்மாவிலும் கண்டு இன்புற்றிருத்தலல்லால் வேறு செயலில்லை, சொல்லில்லை, எண்ணமில்லை. நந்தனார் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனைக் கண்டு வணங்க 'நாளைபோவேன்' என்று திருநாளைப்போவாராயினார். 'நினைப்பவர் தம் மனம் கோயில் கொண்டருளும் அம்பலத்து நிருத்தனாரைச் சுந்தர மூர்த்தி சாமிகள் முதன்முறை கண்டு வணங்கிய போது அவரது நிலையைச் சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங்கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத் துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும்ஆனந்தஎல்லையில்தனிப்பெருங்கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்துமாறிலா மகிழ்ச்சியின்மலர்ந்தார்

எப்பொருளையும் முதலில் காண்பது கண் தான். பிறகுதான் மனத்திற்கும் மற்ற உணர்வுகளுக்கும் வேலை. பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல் உணர்தல் ஆகிய ஐம்பெரும் அறிவுக் கூறுகளும் கண்ணில் நின்றதாக கூறும் பொழுது ஆண்டவனும் ஆன்மாவும் கண்ணில் மூலம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதைக் காண்கின்றோம்.

திருமூலரும் விண்ணுக்கும் மண்ணுக்கும் விரிந்துள்ள பரம்பொருளைக் 'கண்ணகத்தே நின்று காதலித்தேன்' என்று தன் அனுபவத்தை விளக்குகின்றார். அப்பர் பெருமான் இதே கருத்தினை எங்குமுள்ள இறைவன் 'கயிலாயத்துச்சியுள்ளான், காளத்தியான் அவன் என் கண்ணுள்ளானே' எனப்பாடுகின்றார். ஆனால் இறைவனை 'முந்தை

காண், மூவரிலும் முதலான் காண்........ எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன்காண் அவன் என் எண்ணத்தானே' என்று அப்பர் சுட்டிக் காட்டும் பொழுது குறிப்பிடுகின்றார். சிதம்பர சுவாமிகள் தமது திருப்போரூர் சந்நிதிமுறையில் 'முன்னுடிப் பண்பவந்த துன்ப மறப்பார் தொழு போரூரானைக் கண்டு வந்து நெஞ்சே கருது என்று கூறுகின்றார். கண்ணால் கண்ட பெருமானை நெஞ்சில் நிறுத்தி மனத்தில் கண்டு இன்புறு தல் அடியார் செயல் போலும். கருவூர்த்தேவன் திருப் பூவணத் திருவிசைப்பாவில் கூறுகின்றார். "நீ என் கண்ணிலுள்ள கருமணியின் சுற்றிடங்களுட் புகுந்து அங்கே நின்றாய். என் கண்ணினுள் உன்னைக் கண்ணாரக் கண்டு கலந்து உன்னுள் ஒடுங்கி நின்ற எனக்கு அவ்வாறு நுண்ணியனாயிருந்தா யெனினும் நீ அண்டங்களெல்லாங் கடந்து அப்பாலுமாய் நிறைந்து நிற்கின்ற அணுத்தன்மை கடந்த உன் பெரியனாந் தன்மையையும் நானறிவேன்." ஊனக் கண்ணால் உண்மை அறிய இயலாது. எனவே தான் ஞானக்கண்ணால் காண வேண்டும் என்று கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குத் தன்னை உணரும் கண்ணை யளித்தருளினார். முகத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள் அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம் என்று திருமூலர் வலியுறுத்துகின்றார்.

காணுங்கண்ணால் காண்பது மெய்த் தொண்டேயான கருத்துடையாராய் 'ஆடுஞ்செம்பொற்கழல் மனத்துக் கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பே. அன்றிப் புற நோக்கும் கண்ட உணர்வு துறந்தார் போல் பிறந்த பொழுதே கண் காணார் தண்டியடிகள். அவர்தம் திருக் குளத்திருப்பணியை இகழ்ச்சி செய்த சமணர்கள் கண் பார்வை இழக்கவும், தண்டியடிகள் தம் கண் ஒளிபெறவும் இறைவன் திருவருள் துணை செய்தது எனின் கண் பார்வையற்ற அடியாரின் திருத்தொண்டை என் னென்பது.

கண்ணின் மற்ருெரு செயல் அழுதல். பிரிவை நினைத்தும், இழப்பை எண்ணியும் அழுதல் உலக இயற்கை. ஆன்மிக வாழ்வில் அழுதல் என்பது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குதலாகும். அதாவது உள்ளும் புறமும் ஆண்டவனைக் கண்டு தொழுது தூமலர் தூவி அழுது காமுற்று அரற்றி வழிபடுதலாகும். 'மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி 'வழிபட வேண்டுமென்று கூறும் மாணிக்கவாசகர் 'வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்று அறுதியிட்டுக் கூறுகின்ருர். 'கண்களில் கண்ணீர்த் துளிகள் பனித் துளிகள் போல் ததும்பவும் கைம்மலர்கள் மொட்டுப் போன்று குவியவும், உன் அபயம், அபயம் என்று அரற்றி எலும்பெல்லாம் கரைகின்ற. அன்பர் திருக் கூட்டத்தில் அடியேனையும் கூட்டி வைக்கும் அரனுர் திருக்கோயில் பெரும் பெற்றப் புலியூரிலுள்ள சிவஞானம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாகும்' என்று கருவூர்த் தேவர் திரு விசைப்பாவில் குறிப்பிடுகின்ருர். மேலும் அப்பர், சம் பந்தர், சுந்தரர் ஆகியோர் சிவத் தலங்களில் சிவ பெருமானை வழிபடும் போது மார்பாரக் கண்ணீர் நனைந்து வழிபட்டனர் என்று சேக்கிழார் நயம்பட உரைக்கின்ருர். திருஞான சம்பந்தர் திருநல்லூர்ப் பெருமானை 'வலம்வரும் பொழுதினில் பெருகுநீர் வெள்ள ஆனந்தமெய் பொழிய மேல் ஏறி நீர் துள்ளுவார் சடையாரைத் தொழுது முன் பரவுவார்'.

எனினும், கண்ணின் செயல்பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அருணகிரி நாதர், 'விழிக்குத் துணை திருமென்மலர்ப்பாதங்கள்' என்றும், கண்ணினுல் அவர் நல் விழாப் பொலிவு கண்டார்தல்' என்று சேக்கிழாரும், 'கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி' என்று மணிவாசகப் பெருமானும், ஆணவமான படலங் கிழித்தறிவிற் காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி' என்று குமரகுருபரரும் கூறுகின்றனர். அகத்தில் கண்

கொண்டு புறக்கண்கள் மூலம் காணும் கரணங்களையெல்லாம் பேரின்பமெனக் கொண்டொழுக வேண்டுமென்பதே திருமுறைகளின் கொள்கையாகும். உடலில் உள்ள ஐம் புலன்களில் நான்கு தலையில் உள்ளன. அவற்றிலும் முக்கியமாகக் கருதப்படுவது கண். அக்கண் உலகப் பொருட்களைக் கண்டின்புறப் பயன்படாமல் கறைக் கண்டன் கோயிலைக் காணப் பயன்படல் வேண்டும். அதனுற்றான் அப்பர் பெருமான் கண்காள் காண்மின்களோ என்றும் இறைவனின் கோயிலைக் கண்டு எம்பெருமானைக் கண்ணின் மணியாகக் கொண்டொழுக வேண்டும் என்றும் வலியுறுத்துகின்ருர். சுந்தரர் வரலாற்றில் சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்கை மீறியதால் கண்ணிழந்து அல்லற்பட்டதையும் தலந்தோறும் இறைவனை ஏத்தி வாழ்த்தி வணங்கிப்பாடி கண்பெற்றதையும் சேக்கிழார் தெளிவாகப் பாடியுள்ளார்.

தன்னையடைந்தார் வினை தீர்ப்பதைத் தன் தலையாய கடனுகக் கொண்டுள்ள சிவபெருமான் மானுடர்க்குக் கண்கள் படைத்ததே தன்னைக் காண வேண்டுமென்ற நோக்கமுடன்தான். 'காணூர்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே' என்று வள்ளலாரும், 'கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி' என்று மணிவாசகரும் 'கண்ணுனாய் மணியானாய்' என்று அப்பர் பெருமானும் எம்பெருமானை வழுத்துகின்றனர். எனினும் மும்மல வயப்பட்டிருக்கும் ஆன்மாக்கள் வந்த வேலையாகிய அவனருளைக் கண்ணுகக் கண்டு இறைவனது ஆலயத்தையும், அடியாரையும் கண்டு வழிபடுவதை விடுத்து பந்தக்காலாகிய உலக இன்பங்களில் உழன்று உண்மையென மயங்கி மீண்டும் பிறப்புக்கு வழி தேடுகின்றனர். திருமுறைகளில் 'கண்' பற்றிய காட்சியினைக் கண்டு அகக்கண்ணில் சிவனைக் கண்டு வணங்கி பிறவா வரம் பெற்று பரமானந்தக் கடலில் மூழ்க வேண்டும் என்பதே ஆன்ருேர்கள் அளித்த அருட்தகல்வமாகும்.

சேக்கிழாரும் சேயிழையார்களும் 13

சிவநெறித் தவமணி,
திரு, த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை

தத்தையும், தேவராட்டியும்.

தத்தை என்பவள் கண்ணப்ப நாயனரின் தாய் ஆவார், புலவர்களும் போற்றக்கூடிய வளம் செறிந்த நாடாகிய போத்தப்பி நாட்டின் தலைநகராகிய உடுப் பூரிலே வேடர் சேரியிலே, வேடர் மரபிலே பழமையாகிய குடியில் வந்தவள். வேடர் தலைவனுகிய நாகனுக்கு மனைவி யாக வாய்க்கும் பேறு பெற்றவள். ஒத்த குடிப்பிறப்பிலே வந்தவர்களுக்குள்ளேயே திருமணம் செய்யும் பழக்கம் அக்காலத்து வேடர்களுக்குள்ளும் இருந்தது. வேடர் களுடைய மரபு வழக்கப்படி புலிப்பல்லைத் தாலியாக இடை இடையே கோத்து மாலையாகப் பூண்டிருந்தாள்.

இல்வாழ்க்கையில் நீண்டகாலம் பிள்ளைப்பேறு இல்லாததால் மிகவும் வருந்தினுள். பொதுவாக இல்லாத பொருள்கள் மீது ஆசையும் அது கிடைக்காத பொழுது வருத்தமும் அடைவது உயிர்களின் இயல்பு. கிட்டா தாயின் வெட்டென மற என்பது நீதிநூல். ஆனுலும் மனித இயல்பு அதற்கு மாருகக் கவலைப்படுவது இன்னும் சிலர் பிள்ளைப்பேறு இல்லாவிட்டால் மோக்ஷம் கிடையாது என்று கருதி, முத்திப் பேற்றுக்காகவாவது பிள்ளைப்பேறு வேண்டும் என்று வருந்துகின்றனர். அவ்வழக்குப்படி ஆய்ந்தால், நாம் உய்வதற்காக, இவ்வுலகில் அவதரித்து, வாழ்ந்து காட்டிய நம் சமயாச்சாரியார்கள் நால்வரில், திருஞானசம்பந்தப் பெருமான், திருமணம் ஆன பொழுதே தன் காதலியைக்கைப்பற்றிக் கொண்டு ஜோதியில் கலந்தவர், திருநாவுக்கரசு நாயனுர் ஆழ்ந்த துறவுநிலையில் பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்தவர், சுந்தர மூர்த்திநாயனுர் பதினெட்டு ஆண்டுகளுக்குள்ளே இரண்டு திருமணம் ஆகிக் குழந்தைப் பேறின்றி கைலாயம்

சென்றவர். மாணிக்கவாசகர் 32 ஆண்டுகாலம் வாழ்ந்து திருமணமும் ஆகாதவர். எனவே நமது சமய குரவர்களாகிய நால்வரும் பிள்ளைப்பேறில்லாமையால் முத்திப் பேறு பெறுதவர்கள் அல்லர். எனவே பிள்ளைப்பேறு முத்திப்பேற்றிற்கு அவசியம் இல்லை என்பதும், இறைவனிடம் கொண்டுள்ள அன்பு ஒன்றே அவனது திருவடிப் பேற்றிற்கு அவசியம் என்பதும் தெளிவாகிறது.

அல்லாமலும் குழந்தைகளைத் தரவேண்டியவர் இறைவன் அதனுல்தான் பெற்ருேர்கள் தாம் விரும்பியபடி ஆண் குழந்தைகளையோ, பெண் குழந்தைகளையோ பெற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆண் குழந்தை இல்லையே என்றும் பெண் குழந்தை இல்லையே என்றும், பிள்ளையே இல்லை என்றும் ஏங்கும் தம்பதிகள் இன்னும் இருக்கிருர்கள். அதனைப் பெறுவதற்காகக் காசி, இராமேஸ்வரம் செல்லுவதிலிருந்து இறைவனே குழந்தைகளைத் தர வல்லவன் என்ற நம்பிக்கை தொன்று தொட்டு இன்று வரை இருந்து வந்திருக்கிறது என்பது தெரிகிறது.

பெற்ருேர்கள் நமக்குத் தூல உடல் கொடுக்கக் காரணமாக இருந்த ஒன்றினுலேயே நமக்குத் தாயும் தந்தையும் ஆகின்ருர்கள். ஆனுல் உண்மையில் இறைவனே நமக்கு உடல் கொடுத்த அம்மையும் அப்பனும் ஆவான். நமக்கு நம்முடைய தூல உடலை இயக்குகின்ற சூக்குமமான, பாரமில்லாத எல்லா அங்கஅவயவங்களையும் உடைய ஒரு உள் உடலை இறைவன் கொடுத்திருக்கிருர். நமக்கு பாரமில்லாத உடலைக் கொடுத்திருக்கும் இறைவனும் பாரமில்லாத, ஆனுல் அருள் திருமேனி உடையவராக இருக்கிருர். அவர் நமது பாரமில்லாத, சொப்பனத்தில் தொழில்படுகிற, சூக்குமஉடலுக்குரியவித்தைஉண்டு பண்ணுகிருர். வித்தையே உண்டு பண்ணும் வல்லமை உடையவர் ஆனதினுல் "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்று இறைவனை மாணிக்கவாசகர் போற்றுகிருர். இறைவன் உண்டாக்கிய அச்சூக்கும உடலுக்குரிய வித்தானது, தூல உடலை உடைய பெற்ருேர்கள் மூலம் தூல உடலுக்குரிய வித்தை உண்டாக்கிப் பின் இரண்டும் சேர்ந்து வளர்ந்து குழந்தையாகப் பிறக்கிறது. எனவே தூல உடலை உண்டுபண்ணுவதும், தூல உடலை வளர்ப்பதும் இறைவன் அளித்த சூக்கும வித்தேயாகும். அதுவே

சொப்பனத்தில் தொழிற்படும் சகல அங்க அவயவங்களும் உடைய உடலாக வளர அதனோடு சேர்ந்து யாக்கப்பட்டிருக்கும் தூல உடலும் வளருகிறது. அச்சூக்கும சரீரத்தையே சித்தாந்த சாத்திரங்கள் யாதனு சரீரம், சூக்கும சரீரம், பிராணமய கோசம் என்று சொல்லுகின்றன. சுத்தத் தமிழில் ஆவி என்று பலரும் அருளியிருக்கிறார்கள்.

"ஆவியொடு காயம் அழிந்தாலும்—பட்டினத்தார்
கூடுவிட்டு இங்கு ஆவிதான் போயினபின்—ஔவையார்
ஊனில் ஆவியை ஓமபுதற் பொருட்டு உண்டு உடுத்துஇருந்தேனே
— மணிவாசகர்

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனை — திருநாவுக்கரசர்

அந்த ஆவி உடலுக்கே இறைவன் பெயரையும் சூட்டி விடுகிறார் அப்பெயரையே நமக்குப் பெற்றோர்கள் இடும் படியாக அவர்கள் அறியாமலேயே அவர்களை அதிட்டித்துத் தனது ஆணையை அமுல் நடத்துகிறார்.

மேற்கூறியவற்றிலிருந்து குழந்தைகளைத் தரவேண்டியவன் இறைவனே என்றும் அவன் தர அக்குழந்தைகளைக் கடவுளிடமிருந்து பெற்றவர்களே பெற்றோர் எனப்படுகின்றனர் என்று தெரியலாம், மற்றவர்கள் திருமணம் ஆனவராயிருந்தாலும் கணவன் மனைவி என்று சொல்லப் பெறுவார்களேயன்றித் தாயும், தந்தையும் ஆவதில்லை. அதனாலேயே குழந்தைப் பேறு வேண்டி இறைவனுக்கு விழா எடுக்கும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

அப்பழக்கத்தின்படி, நாகனும் தத்தையும் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகப் பெருமானை வழிபட்டார்கள். முருகன் கோயிலுக்குச் சேவலும் மயிலும் விட்டார்கள். தோரண மணிகள் கட்டினார்கள். குரவைக் கூத்துடன் பெருவிழா எடுத்தார்கள். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் கருணை வள்ளலாகிய முருகப் பெருமான், அவனுக்கு விழா எடுத்தவர்களுடைய பிரார்த்தனைக்குச் செவி சாயாது இருப்பரோ? அவர் அருளினாலே தத்தை கர்ப்பவதியானாள். தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, அளவில்லாத முன்னைத் தவமுடைய கண்ணப்ப நாயனார், தவத்திற் சிறந்த நாகனுக்கும் தத்தைக்கும், குழந்தையாக இறைவன் அருளாற்

பிறந்தார். இறையருள் உணர்த்தத் திண்ணனுர் என்று பெயர் சூட்டினர், தங்கள் வேடர் மரபுக்கு ஏற்றபடி தெய்வத்தை வணங்கிக் காப்பு அணிவித்தார்கள். இளந் தளிர் சூட்டியும் வேம்பிழைத்து இடையில் கோத்த அரை மணிக் கவடி கட்டியும் அழகு செய்து குழந்தையை வளர்த்தார்கள். ஒவ்வொரு பருவத்திலும் தெய்வங்கட்கு விழாச் செய்தனர்.

ஓராண்டு வளர்ந்தபோது திண்ணனுருடைய தலை முடியைப் பின்னி முடித்து புலியின் நகத்தினைச் சுட்டியாக அணிவித்து மகிழ்ந்தனர். முள்ளம்பன்றியின் முள்ளை அரித்து இடையிடையே கோத்த புலிப்பல் மாலையை அணிவித்தனர். திண்ணனுர் தளர் நடையிட்டு வளர்ந்து வருவாராயினுர். நாகனும் தத்தையும் அவருடைய மழலை மொழி கேட்டு மகிழ்ந்தனர், தத்தை திண்ணனுரைத் தன் மார்பில் தூங்க வைத்தும் பாசி மணிகளோடு கட்டிய சதங்கை ஒலிக்கக் கட்டியும் காசு கோத்த அரைஞாண் கட்டியும் இவ்வாறு பலவும் அணிகள் செய்து திண்ண னுரை வளர்த்தாள். "தத்தையாம் தாய்" என்று திரு முறைகளில் போற்றப் பெறும் பெருமை உடையவள் ஆனுள்.

இனித் தேவராட்டியை யார் என்று சிந்திப்போம். இவள் உடுப்பூர் வேடர் சேரியில், வேடர் தலைவனும் நாக னது பாதுகாவலில் இருந்த மூதாட்டி. அவள் மலையில் உள்ள தெய்வங்கட்குப் பூசை செய்து வந்தாள். அதனுல், அவளுக்குத் தேவராட்டி என்ற பெயர் வந்ததென்று கருத இடமுண்டு. நாகன் மிகுந்த மூப்படைந்தவர். நாக னுடைய தந்தையைப் பற்றிய செய்திகள் சொல்கிருள் தேவராட்டி- ஆதலின் அவள் நிரம்ப வயது முதிர்ந்தவள் என்பது நிச்சயம்.

தேவராட்டி பூசை செய்யும் மரபில் வழிவழி வந்தவள் திண்ணனுகிய தன் மகனுக்குக் குலத் தலைமை கொடுத்து முதன் முதல் கன்னி வேட்டைக்கு அனுப்பியபோது காடு பலியூட்டத் தேவராட்டியை நாகன் அழைத்தான். அவளும் பூசாரிகளின் வழக்கம் போல அலங்காரம் செய்து கொண்டு வந்தாள். காட்டுத் தளிர்களால் ஆயின மாலை அணிந்து கொண்டாள். மரன் கொம்புகளை அரிந்த குழையைக் காதில் அணிந்தாள். மான் வயிற்றிலிருந்து

எடுத்த அரிதாரத் திலகமிட்டுக் கொண்டாள், பாசிமணி கோத்த வடம் கழுத்தில் அணிந்திருந்தாள். மயிற் பீலியும் தழைகளும் சேர்த்துக் கட்டிய மரவுரியை உடுத்திருந்தாள். நாகனைப் பணிந்து நின்றாள்.

கானின்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக்
கலைமருப்பி னரிந்தகுழை காதிற் பெய்து
மானின் வயிற்றரிதாரத் திலகமிட்டு
மயிற்கழுத்து மனவுமணி வடமும்பூண்டு
தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத்
தழைப்பீலி மரவுரிமேற் சார வெய்திப்
பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப்
போர் வேடர் கோமானைப் போற்றி நின்றாள்.

என்று சேக்கிழார் அவள் வடிவைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

அவளைப் பார்த்து நாகன் அன்னையே! நீ வறுமை நீங்கி நலத்துடன் இனிதிருந்தனையோ? என்று கேட்டான். அதற்கு அவள் அவனை வாழ்த்தி "நல்ல மெல்லிய இறைச்சியும், ஈசலும், தேனும், மலையில் விளையும் பண்டங்களும் பிறவினை பொருள்களுமாக எனக்கு வேண்டியவற்றையெல்லாம் அன்று நீ நியமித்து வைத்தபடியே பெற்று நலமே வாழ்கின்றேன், என்னை நீ அழைத்த பணி என்ன? என்றாள்.

அதற்கு நாகன் "என் மகன் திண்ணன் எங்கள் குலத் தலைமையை நான் கொடுக்க ஏற்றுக் கொண்டு வேடர்களைக் காக்கும் மலையாட்சியை மேற் கொள்ளப் போகிறான். மேலான வேட்டைத் தொழில் அவனுக்கு வாய்த்து வேறு புலங்களைக் கவர்ந்து வெற்றியுண்டாகும்படி வன தேவதைகள் விரும்பியுண்ணும்படி காடுபலியிடுக" என்றான். அதுகேட்ட தேவராட்டி மனம் மிக மகிழ்ந்து, இங்கு நான் வரும் பொழுதே மற்ற நாட்களை விட நல்ல அறிகுறிகள் உண்டாயின. இதனால் உன் மகன் திண்ணன் உன்னைவிட மேன்மை அடைகின்றான்" என்று வாழ்த்தினாள். மலைவாழ் தெய்வங்கள் மகிழ ஊட்டுவதற்கு வேண்டிய சாதனங்களையெல்லாம் நிறையக் கொண்டு போனாள். அவ்வாறே காடு பலியிட்டுப் பூசை செய்து தெய்வங்களை மகிழச் செய்து அந்த அருட் பிரசாதங்களாகிய தேன், தசை, பொறி முதலிய

வற்றுடன் திண்ணனுர் வேட்டைக்கான அணி செய்து கொண்டு புறப்படும் நாளில் வந்து, அவரைச் சுற்றியுள்ள வேடர்களை நீக்கிப் புகுந்து அவர் நெற்றியில் சேடை சாத்தி ''உன் தந்தை தந்தைக்கும் இந்நன்மைகள் உள்ள வல்ல. உன் வல்லமை நன்கு பெரிது; நம்மளவன்று'' என்று வாழ்த்தினுள்,

அதன்பின் வேட்டை முற்றித் திருக்காளத்தி இறை வரைத் திண்ணனுர் கண்டு தம்மை மறந்து அன்பே உருவமாய் நின்று விட்டபின், அவரை உலகியலுக்கு முன்பு போலக் கொண்டு வரும் பொருட்டு நாகன் முதலிய வர்களுடன் தேவராட்டியும் வந்தாள், ஆனுல் ஆன முயற்சிகளைச் செய்தும் திண்ணனுரது இறையன்பு வென்றது.

தொடரும்

5505.

(சிவ சிவ

ஜோதிடமும் அதன் கணித தத்துவத்தில் நாமும் (3)

திரு, இராம. குமாரசுவாமி அவர்கள்
[தலைவர்] சைவப்பிரகாச வித்தியாசாலை
உடன்குடி, நெல்லை மாவட்டம்,

மரணமிலா பெருவாழ்வைக் காண வாரீர்

உண்மையிலேயேகருணையுடன்சொல்லப்பட்டிருக்கிற மரணமிலா பெருவாழ்வை அடைய வேண்டி இன்னொரு குறிப்பையும் நமக்கு அருளியிருக்கிரார்கள் அவைகள் மூன்று!

1) பசித்திரு, 2) தனித்திரு 3) விழித்திரு

என்ற கருணையுள்ள மந்திர ஒலியின் நோக்கத்தையும் இங்கே இதுசமயம் விளக்கம் தரப்படுகிறது!

பசித்திரு! என்று சொல்லியது, சாப்பிடாமலிரு என்று சொல்லவில்லையே! உடலுக்காக உடல் நடமாடித்திரிய வேண்டி உணவை அளவோடு உட்க்கொள் என்பது தான் அளவு என்பது உணவு உண்டு எழுந்திருக்கும் அச்சமயமே பசியோட எழுந்திரு என்பதுதான் அதன் பொருள்!.

ஏன்? தலையணைக்கு பஞ்சை அடைக்குமாப் போல், பொறுப்பற்ற முறையில் ஆசைப் பெருக்கால், அடைத்து திணராதே!.

முக்கியமாக ஆன்ம நேய வழிபாட்டிற்கும் அது போல உலகியல், வாழ்வு நடத்தி நடமாடிதிரியவும் உணவு முக்கிய மென்பதும் மறுக்க முடியா தொன்று. இதுவகையில் முக்கியமாக சீவகாருன்யம் மிகமிக அவசியம்!. அதிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்ன?. கொல்லாமை எனும் விரதம் பூண்டொழுகியாக வேண்டும்!. குற்றமில்லாத பாவமில்லாத, உணவையே உண்டு, மனிதனாக வாழவும் வேண்டும்.

இவ்வரிய பெரிய உயிருள்ள உணவின் கட்டுப்பாட்டின் உயர்வை உலகோர்களுக்கு எடுத்துச் சொல்ல விளக்கமுள்ளவர்கள் கடமைப் பட்டிருக்கிரார்கள்.

2) தனித்திரு, தனித்திரு என்ருல், எல்லோரும், எல்லரமும் இருக்கும், நிறையுள்ள இடத்தை விட்டு, எதுவுமில்லாத வெற்று இடத்திற்கு மறைந்தோடி போவதல்ல, உதாரணமாக எதுவும் கிடையாத வெற்றிடத்தில் நான் உண்ணு விரதமிருக்கிறேன், இருந்தேன், என்று சொன்னுல் அதையார் ஒத்துக் கொள்வது! முடியாத காரியம்.

ஆனதால் நிறைந்து எல்லோருமிருக்கும் கூட்டத்தில் தான், கட்டுப் பாட்டுடன், ஏன் பொறுப்பற்ற சோம்பேறிகள் கூட்டத்தில்தான், அதனிடையிலேதான் ஊடுருவியிருக்க பொறுப் புடையவர்களின் கடமையாகும்! இதையே தான் வலியுறுத்தி தனித்திரு என்று சொன்னர்களே தவிர, காடு மலைகளில் சென்று மறைந்திரு என்று சொல்லப்படவில்லை.

3) விழித்திரு! விழித்திரு என்ருல் தூங்காதே என்ரு பொருள்? உணவு உண்ணும் மனிதன் எப்படி தூங்காமலிருக்க முடியும்? அது முடியாத காரியம்! தூங்குவதற்கும் கால நிர்ணயம் உண்டு. சதா தூங்கிக் கொண்டிருக்காதே என்று தான் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது உணவு உண்டவுடனும், பசித்திரு என்பது போலவும், அதே மாதிரி தனித்திரு என்ருல்,

பற்பல எண்ணங்களுடைய கூட்டத்தார்களுக்கிடையே தான் தனித்திருக்க வேண்டு மென்று கட்டளை போலும்,

விழித்திரு என்ருல்,

சதா தூங்காமலே விழித்திரு என்று சொன்னது அல்ல. சோம்பேறித் தனமாய் பொறுப்பும், சிந்தனையுமற்ற செயலுடைய, உலகோர் தூங்குவதற்கும், மரணமிலாப் பெருவாழ்வின், வழிநடப்போர் தூங்குவதற்கும், பாகுபாடு இருக்க வேண்டுமென்றும், இதையே, தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்? என்று சுட்டிக் காட்டியுள்ளார்கள். இம் மூன்று பெரு மந்திர வாக்கியங்களும், சாகா கல்விக்கு உறுதுணையுள்ளதே! அது மட்டுமல்ல, காவி உடுத்தி, தாழ் சடை வைத்தும், காடுகள் தோறும் அலையாதே என்னும், எச்சரிக்கை

செய்யப் பட்டிருக்கிறது. அதிலும் இல்லறமல்லது நல்லறமன்று என்பதும் குறிப்பிடத்தக்கது!

இல்லற தருமத்தை முறைப்படி, நல்லறமாக, நடத்துவதற்கும், தன் ஜென்மாக் கடனை தீர்ப்பதற்கும், உண்மையுள்ள குருவும் சீடனுமாக ஆகுவதற்கும், பிறக்காது, இறக்காது, உண்ணாது, உறங்காது, என்றென்றும் எங்கும் நிறைந்து ஏகமாயுள்ள அருட்கடலை அடைந்துய்ய வேண்டியே! இவ், அரும்பெரும், மனித உடலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது!.

இவ்வுண்மையினை தெரியவும், நடமுறையில் செயல் பெறுவதற்கும், ஞானகுரு வந்தாகவும் வேண்டும்!.

ஜென்மாக் கடன் என்றால் இரு பிரிவுகள்! அவைகள் யாவை!. ஒன்று, இருவரும் இணைந்திசைந்து ஒரே ஒரு மகவைப் பெறல், அது ஆணாகயிருப்பினும், பெண்ணாக இருப்பினும், சரிதான்! எதுவானாலும் ஒன்றுதான் தோற்றம், தோற்று விக்கப்படல் வேண்டும்.

ஒரு மகவு தோன்றியதும் ஜென்மாக் கடன் முடிந்து விட்டது. அப்பால் கணவனும், மனைவியுமேதான் குருவும் சீடனுமாக ஆகிவிடுகிறார்கள். இரண்டாவதாக, இம் மனிதப்பிறவியை எடுத்தபயனை அடைவதற்கு எல்லாம் வல்ல சக்தியைக் கண்டு இரண்டறக் கலந்துய்வதே!,

இதைத்தான் மரணமிலாப் பெருவாழ்வு என்பது!. இவ்வுண்மையை அடையத்தான் சேரவாரும் சகத்தீரே என்று அன்றே நம் மூதாதைகள் புலம்பி தவித்திருக்கிறார்கள் செவிசாய்த்தோமில்லை. மேலும் அவ்விதம் உண்மையை அறிந்து தெரிந்து தெளிந்து உய்யவேண்டுமென்றுதான் வேத சுருதிகளெல்லாம் முறையிட்டிருக்கின்றன!. இக்கால எல்கையில் என்ன நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

> "நெஞ்சில் துறவார், துறந்தார் போல் வஞ்சித்து,
> வாழ்வாரின் வன்கணார் இல்"

அதுபோலவும், அகத்தே கருத்து, புறத்தே வெழுத்து இருந்தாற் போல் உள்ளவர்களின் நிலை என்னவாகும் என்பதை யெல்லாம் எண்ணும் பொழுதெல்லாம் மனங் குமுறுகிறது!. ஏன் கவலையுங் கொள்கிறது!.

என்றும் எங்கும் நிறையுள்ள ஏகப்பொருளானது, நமக்குள்ளேயும் மறைமுகமாக, தோன்றுத்துணையாகவே இருந்தவற்றை பொன், வெள்ளி, போன்ற பிரகாசத்தை தெரியவிடாமல், அன்றுடம் நிகழ்ச்சியில் நடந்து நடத்தி வரும். மன அழுக்காறு, உடல் அழுக்காறு போன்றவைகள் நிறைந்து மறைந்துமிருக்கிற, மறைத்துமிருக்கிற ஏழு திரைகளை அதன் இருள் நீக்கினுல்தானே, அங்கு மறைந்து கிடக்கும், அருட்சோதி காட்சி தரும்! இத்தகைய அழுக்கு திரைகள் ஏழையும் நீக்க, ஞானகுருவால்தானே முடியும், பள்ளிப்படிப்பின் புலமைகளை மட்டும் வைத்து மனப்பாடம் பண்ணி அனுபவஞான மில்லாமல். மற்ற ஏனையோர்களுக்கு உபதேசம் மட்டும் வாயால் புலம்பினுல் யாருக்கு என்ன பயன்? வழி காட்டல் மூலமல்லவா, வழி திறக்கப்படவேண்டும்!.

இதன் முன்னமேயே முதல் கட்டுரையில் நம் உடலிலேயே ஏழில் இரண்டும், ஒன்றில் ஏழும் என்று விளக்கம் தந்திருக்கிறது.

வேத சுருதிகளைப்பற்றி கூறிய தென்ன? வேதங்களை கோத்துவைத்தான், ஆனுல் அந்த வேதங்கள், மனிதர்தம் மொழியிலில்லை. எப்படி முன் கட்டுரையில் விளக்கியபடி கனியின் ருசியையும், அதன் மணத்தையும் வாக்கால் சொல்ல இவ்வுலகத்திலேயே மொழிகளில்லை! என்பதே.

அதிலும் அவ்வேதங்களில் உண்மை எங்கே? என்ன முறையில் என்ன வடிவத்தில் அமைந்திருக்கிறது என்பது தெரிய வேண்டு மேயானுல், வழிகாட்டப்படல் வேண்டுமே!

வேதங்களன்றி ஒன்றில்லை என்றுலும், அதனுள்ளே அவரவர்கள் திறமையைக்காட்ட, அனுவசியமாக, அர்த்தமற்ற சிற்சில கற்பனை வாசகங்களையும் புகுத்தியுள்ளார்களே இதையுங்கூட நம் முன்னேர்கள்.

வேதாகமங்களென்று வீண் வாதம் ஆடுகின்றீர் வேதாகமத்தின் உண்மை யறியீர்! என்றும் தெளிவு தந்துள்ளார்கள். செத்த பிறகா? சிவலோகம், வைகுந்தம் என்னே அறியாமை

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன். அப்பால் தொட்டுக் காட்டியதாலே, உடம்பினுக்குள்ளேதான்

உறுபொருளைக் கண்டேன்’ அப்பால்தான் உடம்பையும் பேணி வளர்த்தேன். அதனுல் அங்கு மறைந்து தோன்ருத் துணையாக இருந்திருக்கிற ஜோதியருளைக் கண்டேன். அது மூலம், கோயிலாகவும் கொண்டேன். இது வேத சுருதிகளின் முறையீடும், நம் அனுபவமுங்கூட மறுக்க முடியாத பேருண்மையே!

பொதுவாக வேதத்திலே தர்க்க வாதத்திலே விளங்காது என்ருல் ஏப்படி? வேதங்கள், பல, மதங்கள் அதனுல் பல, அது வகையில் மொழிகள் பல, இறுதியில் கருத்தோ மாறுபட்டதல்ல, ஒன்றே! தான்!

ஒரே கடல், ஒரே நதி! இவைகளிலிருந்து, பலபல கால், வாய்க்கால், குளங்கள், கேணிகள். எல்லா நீரும் நதியில் இணைந்து இறுதியில் கடலில் போய் அடைவது போல, மேலும், ஒரே நபர், இன்னெருவருக்கு அப்பாவும், அதுபோல மாமாவாகவும், மருமகனுகவும், மைத்துனரா கவும், அத்தானுகவும், அண்ணுவாகவும், தம்பியாகவும், சித் தப்பாவாகவும், தாத்தாவாகவும், இருந்து அழைப்பது போலவும் இருப்பதை நாம் காண்கிருேமல்லவா? இதுவும், தண்ணீரை, ஜலம் தீர்த்தம், வெள்ளம், பாணி, வத்துரு, வாட்டர் என்றெல்லாம் எப்படி ஒரு பொருளுக்கு பலபேர் இருக்கிறதோ, அவரவர்கள் மொழியிலே, முறைப்படி அழைப்பதுதானே வழக்க பழக்கங்கள். ஒரே ஒரு ஊருக்கு பல பாதைகளிருப்பது போலவும், இன்னும் பல சான்றுகள் கூறலாமே!

இதைத்தான் சமயகோடிகளெல்லாம், உன் தெய்வம். தம் தெய்வமென்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது. என்று வினவியிருக்கிரார்களே!

ஆனதால் இது மூலம் என்ன விளங்குகிறது? ஒரே ஒரு பொருளைத்தான் பல மொழிகளில், அழைக்கிருே மென்பதையும் நாம் இவ்விளக்கத்திற்குப்பின் அறியக் கிடக்கிறது!

ஆனதால் எந்த சாதி இனமதச் சண்டையோ மொழிச் சண்டையோ இல்லாமல், ஒன்றே குலம், ஒரு வனே தேவன் என்ற உண்மையை அறிந்து தெரிந்து தெளிந்து மனித உள்ளத்தோடு மனிதனுக வாழ்ந்து வர வேண்டும்.

நமக்காக, சொன்ன பெரியோர்கள் வேடிக்கைக்காக நமக்கு அவ்வாக்கியத்தைத் தரவில்லை. வாழையடி வாழையென வந்த திருக் கூட்டமென்று துன்பமான இந்த நிலையில் மாற வேண்டுமேயானால், நாம் எல்லோருமே, ஒரே வாழையடியிலிருந்து தோன்றியவர்களே தான் என்ற உண்மையை அவசர அவசரமாக பரந்த உலகத்திலுள்ள உலகோரனைவரும் இவ்வழியைப் பின் பற்றியாக வேண்டும்! என்பதுதான் அவர்களின் விருப்பம்.

விரோத குரோதம் வேண்டாம், ஏழை எளியவர்களுக்கு தோன்ற மாட்டார்கள், மனிதர்களில் மனிதர்களாகவும் மண்ணில் நல்லவண்ணம் வாழ முடியும்!

அதுமட்டுமல்ல, இதனுல் நோய்களே வராது. மருந்து தயாரிக்கும், மருத்துவர்களுக்கும், இம்மண்ணில் வேலையில்லை. மருத்துவக் கல்லூரி என்று தனியாக வீணுக நம் வரிப்பணத்திலிருந்து, செலவு செய்யவும் வேண்டாம்.

கண்ணிற்கு அணிகலன் கண்ணேட்டம் என்று சொன்னது போல், நல்ல கருணையுள்ளவர்களாகவும் நம் சந்ததிகள் தோன்றிக் கொண்டிருக்கும்! எதையும், கொண்டு வந்ததுமில்லை! கொண்டு போவதுமில்லை! என்பது நூற்றுக்கு நூறு உண்மைதானே! நம் சந்ததிகளுக்கு ஏன் தேடி வைக்க வேண்டும். அதனுல் ஏன் கவலைப்பட வேண்டும். வேண்டாம்.

இவைகளெல்லாம் மறைந்தொழிய வேண்டுமேயானுல், நம் முன்னேர்கள் நமக்கு தந்த சென்ற அறிவுரையை கடைப்பிடித்தாகவும் வேண்டும். இது தான் ஞானம்!

ஞானம் என்ற ஒன்றை எங்கோயிருந்து கொள்முதல் செய்வதில்லை. எல்லாமே நமக்குள் அடக்கமாக இருப்பதுதான்.

இம்மாதிரி உண்மைகளைத் தெரிந்துக் கொள்ளத் தான் சத்சங்கம் நிறுவி, அதுமூலம் கூட்டு வழிபாடு நடத்தியாகவும் வேண்டும்,

கூட்டு வழிப்பாட்டையும், எம்முறையில் இயக்க வேண்டுமென்பதற்கு முறையுண்டு.

அதாவது, கூடுவது, கூட்டமல்ல! கூடி ஒருவர் சொற்பொழிவை கேட்ப்பது, அப்பால் கலைவது கூட்டம் கூடியதாகவோ, கூட்டு வழிபாடு என்று பட்டம் கட்டு வதோ, ஆகாது. பின் எப்படி?

அங்கு அச்சங்கத்தில் எத்தனை பேர் கூடியிருப்பார் களோ! அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் அனு பவங்களை அக்கூட்டத்தில் எடுத்துரைப்பதுவே! கூட்டு வழிபாடுமென்பது!

இதுதான் வேத சுருதிகளின் அனுபவம் வேத மறைகள் எல்லாம் நம்மிலிருந்து தான் கருத்துக்கள் வெளிப்பட்டிருக்கிறது.

என்பதையும் நாம் உணரக் கடமைப்பட்டிருக் கிறோம். விரிக்கில் பெருகும்.

நம் தமிழகத்தில் ஒரு பெரிய தத்துவ அனுபவத் தையும், நமக்கு நம் முன்னோர்கள் தந்திருக்கிறார்கள்.

என்ன! சங்கமம், அதாவது கடலும், ஆறும் சந் தித்து கலக்குமிடம் சங்கமம். இதில் நம்மையும், அதில் கலந்து குளிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். இதை தெய்வ பக்தியாகவே அமைத்திருக்கிறார்கள்.

காரணம் நதிகளில் தண்ணீர் எங்கிருந்து எப்படி வருகிறது? கடலிலிருந்தே தான் கடன் வாங்கப்பட்டது என்பதை நம்மில் அனேகர் அறிவார்கள்! ஆகாயம், மலை, இவைகளின் இயற்கை கோளங்களால், கடலி லிருந்துகடன் வாங்கிய இடம் நோக்கி, அக்கடனை தீர்ப் பதற்கு ஓடோடி நதிகள் மூலம் தீர்க்கப்படுகிறது. அக் காட்சியை காண்பதற்காகவே அங்கு சென்று நீங்களும், அதில் கலந்துக் குளிப்பதும், அதன் மூலம் நாமும், இந்த ஜென்மாக் கடனை வாங்கிய கடனை தவறாமல், தீர்க்கவும், வேண்டுமென்பதுதான் இதன் கருத்து,

அதுவும், ஓராண்டில், ஒருமுறைதான் சங்கமம் சந் திக்கும். இதனால் மேலும் எதைக் காட்டி எச்சரிக்கிறது?

முன் கட்டுரையில். தெளிவுரையின்படி, இந்த ஜென் மாவில் ஒரு மகவைத் தான் பெற்ருக வேண்டுமென்பதும், இதன் குறிப்பு என்பதை மறந்து விடுவதற்கில்லை.

இவ்வித உருப்படியான உயிருள்ள கருத்துக்களை நாமும் செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தியும் அங்கு நதியும்: கடலும், சந்திப்பதில் நாமும் ஏன் அங்கு சந்திக்க வேண்டுமென்பதற்குத் தான் மேலே காட்டிய விளக்கம்.

மேலே காட்டிய பல விளக்கங்களெல்லாம், எதற்காக சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், மீண்டும் ஞாபகமூட்டு கிருேம். மனிதன் தன்னை தன்முன் காணவும் வேண்டும். அதனுல் எங்கும் நிறைந்து எல்லா உயிர்களுக்கும் உயி ரூட்டும், பொருளை இன்னதென்று உணர்ந்துத் தெளிந்து தெரியவும், மனிதரில் மனிதனுக வாழவும், அதன் மூலம் மரணமிலாப் பெருவாழ்வை அடைந்துய்யவும், உண் மையைத் தெரியவுமே!

பொதுவாக இவ்வுலகில் யாராக இருந்தாலும், முன்ன வர்கள் கண்டனுபவித்த உண்மை வேத சுருதிகளின் கருத்துக்களை அடிப்படையாக வைத்தேதான், வசன கட்டுரைகள், கவிதைகள் எல்லாமே எழுதப்பட்டிருக் கிறது. எந்த அடிப்படையுமில்லாமல் நம்மவர்களில் யாரும் எழுத முடியவே முடியாது.

குறிப்பாக நூலாசிரியர் ஒருவர்,

உரியாசிரியரோ, பலர், பலரேயாவார்.

இந்தநிலையில் எந்தக் கருத்தை எழுதினுலும், நேரப்போக் கிற்காக மட்டும் இல்லாமல், அவை உயிருள்ளதாகவும், வாழ்விற்கு வழிவகை காண வேண்டி உரித்துள்ள தாகவே அமைந்தால்தான் இந்த உயரிய மனித ஜென்மா பயனடைந்து உய்யவும் முடியும்.

இந்த நிலையில் வாசகர்களும் பொறுப்புடனேயே அவை உயிருள்ளதா? வாழ்விற்கு வழிகாட்டக் கூடி யதா? என்பதை ஆராய்ந்தே அதை தொடரவும் வேண் டும்.

நூல் என்பது ஒன்றே ஒன்றுதான், நூல்கள் அல்ல! எந்த நூலை படித்தாலும், அவைகள் ஒரே கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறது, கருத்துக்குக் கருத்து மாறுபட்டிருக்குமேயானல் அவைகளை நூல் என்றழைக்க நியாயமில்லை. ஆனுல் நூலுக்குரிய உண்மைக் கருத்தைத் தெரியாமல், உரையாசிரியர்கள் தங்களின் படிப்பின் திறமைகளை வைத்து (அனுபவமில்லாமல்) மாறுபட்ட கருத்துக்களை அப்படித்தான் என்று வாதாடுவார்களேயானல், அவைகள் உரையாசிரியர்களின் குற்றமேயல்லாது நூலாசிரியர் குற்றமல்ல, நூலின் குற்றமுமல்ல, என்பதைத் நாம் இது மூலம் உணரவேண்டற்பாலது.

ஆனதால் மனிதன் மனிதத் தன்மையுடன் கருணையுடன் வாழ வேண்டியும், ஜென்மா பயனை அடைய வேண்டியுமே, கருணையுள்ள நம் மூதாதைகள் நமக்கு தந்த சுவடிகள்.

அவைகளை கண்ணுற்று பயனடைவோமாக! தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ் மறைகள் வாழ்க! தமிழினம் கூடி வாழ்க! கொல்லாமை எனும் விரதம் எங்கும் பரவி உலகமனைத்தும் வாழ்க, வாழ்கவே.

தொடரும்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்தின் நிர்வாக சபையின் கூட்டம் கலைக்கோவிலில் 1977ம் வருஷம் நவம்பர் மாதம் 26ம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்ற நடபடிக்கைகள் விபரம்,

Sri. P. Somasundaram, B. A., B. T. Head Master, Sri. K. G. S. Boys High School, Srivaikuntam. Presiding,

ஆஜர்மெம்பர்கள்:

M.R.Ry. T. M. Kumaraguruparan Pillai Avl
,, K. Subramania Pillai ,,
,, S. Kumaraguruparan Pillai ,,
,, S. Arumugam Pillai ,,

விஷயம்

குமரகுருபரன் பத்திரிகை சந்தா நிலுவை பாக்கிகள் அதிகமாகிக் கொண்டு வருகிற நிலைமையிலும் சந்தாதார்களுக்குபல முறை எழுதியும் ஷை நிலுவை வசூலாவதாகத் தெரிய வில்லையாதலாலும் பேப்பர் மற்றும் சாதல்வார் சாமான்களின் கிரையம் கூடிக் கொண்டே போவதாலும் ஷை விபரங்கள் எல்லாம் சில ஆண்டுகளுக்கு முன்பே ஷை பத்திரிகை தோற்றுவித்த ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் காலத்திலேயே மடத்துக்கு விண்ணப்பித்ததில் பத்திரிகையை நிறுத்திவிடலாமென்று உத்தரவு கிடைத்திருப்பதாலும் பத்திரிகையின் ஆண்டு சந்தாவை இதற்குமேல் உயர்த்துவதும் சாத்தியப் படாததாலும் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் பத்திரிகை நடைபெற மிகுந்த தயக்கம் ஏற்பட்டு வருவதாலும் அது சம்பந்தமாக ஆலோசித்து முடிவு செய்ய.

தீர்மானம்

பொருளாதார நெருக்கடியின் காரணமாக ''குமரகுருபரன்'' பத்திரிகையை 1977ம் வருஷம் டிசம்பர் மாதத்தோடு நிறுத்தி விடுவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கலாயிற்று.

(Sd) P. Somasundaram Presiding Member
S. Kumaraguruparan Pillai
S. Arumugam
T. M. Kumaraguruparan Plllai
K. Subramanian

(அசலுக்கு சரியான நகல்)